From
the People of Japan

unicef

# இலங்கையில் தடுப்பூசி வழங்கல் சேவையை வலுப்படுத்துவதற்கு யப்பானின் புதிய நிதியுதவி

**கொழும்பு, 30 மார்ச் 2021-** கொவிட்-19 பெருந்தொற்றுக்கான உதவிகள் உள்ளடங்கலாக தடுப்பூசி வழங்கல் சேவைகளை வலுப்படுத்துவதற்கும், இலங்கையின் தடுப்பூசி வழங்கலுக்கான குளிரூட்டல் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதற்குமாக யப்பான் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினூடாக அண்ணளவாக 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட அதிக தாக்கம் ஏற்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்ட வயதான மக்கள் தொகை உள்ளடங்கலாக முன்னுரிமையளிக்கப்பட்ட குழுக்களுக்காக இலங்கையானது தற்போது தடுப்பூசி வழங்கலை முன்னெடுத்து வருகின்றது.

“இலங்கையின் நீண்ட கால பங்காளர் என்ற வகையில், கொவிட்-19 இற்கு எதிரான எமது இணைந்த முயற்சியில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினூடாக அவசர கால நிதியுதவியை வழங்குவது எமக்கு பெருமையாக உள்ளது. குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலி திட்ட கருவிகள் மற்றும் அதுசார்ந்த தொழிநுட்ப உதவிகளின் கொள்வனவு என்பது நாடு முழுவதிலும் தடுப்பூசியின் சமமான அணுகல் மற்றும் துரித பகிரலை உறுதி செய்யும்” என இலங்கைக்கான யப்பானியத் தூதுவர் சுகியாமா அகிரா தெரிவித்தார்.

இப்புதிய, உரிய தருணத்தில் வழங்கப்படுகின்ற யப்பானின் பங்களிப்பானது குளிரூட்டப்பட்ட அறைகள், குளிரூட்டிகள், மற்றும் தடுப்பூசி கொள்கலன்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்குப் பயன்படும். மேலதிகமாக, குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலி கட்டமைப்பை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல், வினைத்திறன்மிக்க தடுப்பூசி முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதுடன், அனைத்து மாவட்டங்களிலும் தடுப்பூசி களஞ்சியப்படுத்தலின் வெப்பநிலை கண்காணிப்பு முறைமையின் பரவலாக்கலுக்கும் இந்த உதவித் தொகை பயன்படுத்தப்படும்.

“கொவிட்-19 தடுப்பூசி சேவைகள் வழங்கலை ஆதரவளிப்பதற்கும், இலங்கையின் சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்துவதற்கும் சுகாதார அமைச்சுடனான எமது இணைந்த முயற்சிகளில் யப்பானிய அரசாங்கத்தின் பங்களிப்புகள் மிக முக்கியமானவையாகும்” என இலங்கை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதி எமா பிரிஹம் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் தேசிய தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதற்காக கொவெக்ஸ் வசதியின் ஊடாக, மார்ச் மாதத்தில், முதல் தொகுதியான 264,000 ஒக்ஸ்போர்ட் அஸ்ராஷெனக்கா “கொவிஸீல்ட்” தடுப்பூசிகளை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தருவித்து வழங்கியிருந்தது.

யப்பானிய அரசாங்கத்தின் இந்த உதவியானது, கொவிட்-19 தடுப்பூசி நிகழ்ச்சிகளை பெறுதல், சேமித்தல் மற்றும் வழங்குதல் உள்ளடங்கலாக இலங்கையின் ஒட்டுமொத்த தடுப்பூசி வழங்கல் முறைகளை வலுப்படுத்தும் முயற்சிகளுக்கு ஒரு உந்துசக்தியாக அமைகிறது.

**மேலதிக தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளுங்கள்:**


ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், இலங்கை அலுவலகம்:
சூசன் வூஸ்டர் பிரேமதிலக்க: +9477 316 5378 மின்னஞ்சல்: swooster@unicef.org

யப்பான் தூதரகம்:
econojpn@co.mofa.go.jp தொ.பே: +94-11-269-3831